விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 355 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 23 வெள்ளிக்கிழமை (09.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே


# வடக்கில் காற்றுடன் மழை தொடரும்



- வடக்கில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமாக மழைக்கு வாய்ப்பு
- கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு எச்சரிக்கை
- காற்றின்வேகம் மணிக்கு 70 தொடக்கம் 90 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும்

11ஆம் பக்கம் பார்க்க

# மின் கட்டணம் மேலும் உயரும்



சபையில் ஜனாதிபதி ரணில்

6ஆம் பக்கம் பார்க்க

போதைப்பொருள் மூலம்

# நாட்டை அழிக்க சர்வதேச சதி

நீதியமைச்சர் விஜயதாஸ

10ஆம் பக்கம் பார்க்க

2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்

## 43 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு 43 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பில் ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 80 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன்போது, 2 பேர் வாக்களிக் கவில்லை. அதேநேரம், தமிழ்த் 11

நாடு முழுவதும்

# 'மண்டோஸ்' புயலால் பொதுமக்கள் பாதிப்பு

(கொழும்பு)



- முல்லைத்தீவு செம்மலையில் கடல் நீர் கிராமத்தினுள் புகுந்தமையால் பதற்றம்.
- திருகோணமலையில் கடல் சீற்றம்.
- மலையகத்தில் மினி சூறாவளி.

வங்காள விரிகுடாவில் தோன்றி வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் "மண்டோஸ்" புயலானது தீவிர புயலாக மாறியுள்ளது என யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் 02

## சீரற்ற காலநிலை மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

தென்மேல் வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள மண்டோஸ் (Mandous) சூறாவளி காரணமாக குளிரான வானிலை நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சில பகுதிகளில் வீசிய 11

## மின் கட்டணத்தை திருத்தும் அதிகாரம் அமைச்சரவைக்கு மாத்திரமே உண்டு

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அமைச்சரவைக்கும்மாத்திரமே உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 11

சீரற்ற வானிலை

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற வானிலையைக் கருத்தில் கொண்டு அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு இன்று வெள்ளிக் 11

ஊர்காவற்றுறை கரம்பனில்

## வீட்டின் மீது முறிந்து விழுந்த பனை மரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர்காவற்றுறை - கரம்பன் பகுதியில் வீட்டின் அருகில் நின்றிருந்த பனை மரம் முறிந்து வீட்டின் மீது விழுந்ததில் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. 11

## குப்பிளானில் ஹெரோயினுடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் 130 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 38 வயதான பெண்ணொருவர் கைது செய்யப் 11

## ஆரோக்கியமற்ற காற்று பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பலத்த காற்றின் ஊடாக இந்தியாவில் இருந்து இலங்கையின் வான்வெளிக்கு தூசித் துகள்கள் வருவதால் நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) பொதுமக்களை எச்சரித்துள்ளது.

வளிமண்டலத்தில் தூசி துகள்கள் அதிகரிப்பதன் காரணமாக 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



தெல்லிப்பழை வைத்தியசாலையின் புற்று நோய் சிகிச்சை பிரிவுக்கு லண்டன் அபயம் அறக்கட்டளை வழங்கிய ரூபா 10 இலட்சம் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் நேற்று வழங்கி வைக்கப் பட்டது. (ம-7)

# கடன்கள் செலுத்தாமல் எரிபொருள் இறக்குமதி

## அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

வெளிநாட்டு கடன்களை செலுத்தாமல் தான் தற்போது எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது.

இதுவே நாட்டின் பொருளாதார உண்மை நிலை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பது புதிய விடயமல்ல. பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் பேச்சளவில் குறிப்பிடுகிறதே தவிர நடைமுறையில் எந்த திட்டங்களும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. உண்மை காரணிகளை மறைத்ததால் நாடு மிக மோசமாக பாதிக்கப்பட்டது என்பதை அரசாங்கம் மறந்து விடக்கூடாது.

எரிபொருள்,எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை இல்லை. அத்தியாவசிய பொருள் இறக்குமதி தடையில்லாமல் இடம் பெறுகிறது ஆகவே பொருளாதார பாதிப்பை முகாமைத்துவம் செய்து கொண்டோம் என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது.நாங்கள் வங்குரோத்து நிலை அடைந்து விட்டோம் என அரசாங்கம் கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி அறிவித்தது. செலுத்தாத கடன் தொகையை கொண்டு எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்யப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் அரச முறை கடன்களை செலுத்திய நிலையில் தான் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருள் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டது,ஆனால் தற்போது வெளிநாட்டு கடன்களை செலுத்தாமல் எரிவாயு,எரிபொருள் கிடைப்பனவு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதுவே நாட்டின் இன்றைய பொருளாதார உண்மை நிலை என்றார். (ம-7)

## 'மண்டோஸ்'...

அவர் வெளியிட்ட அறிக்கையில்,

புயல் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இன்று (09.12.2022) நள்ளிரவுக்கும் நாளை (10.12.2022) காலைக்கும் இடையில் இந்தியாவின் தமிழ்நாட்டின் மரக்காணத்துக்கும் மகாபலிபுரத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புயலின் தற்போதைய நிலையில் இதனால் இலங்கையின் எப்பகுதிக்கும் நேரடியான பாதிப்பு கிடையாது. ஆனால் நாளை மறுதினம் 11.12.2022 வரை வடக்கு மாகாணத்தின் முழுப் பிரதேசத்துக்கும், கிழக்கு மாகாணத்தின் முழுப்பிரதேசத்துக்கும் மற்றும் வடமத்திய மாகாணத்தின் சில பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அத்தோடு நாளையும் நாளை மறுதினம் காலை வரையும் காற்றின் வேகம் அதிகரித்தும் காணப்படும். கடற்கரைப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 50-65 கி.மீ. வரையும் உள் நிலப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 35-45 கி.மீ. வரையும் வீசும் வாய்ப்புள்ளது.

"மண்டோஸ்" புயலின் காரணமாக கடல் அலைகள் உயர்வாக இருக்கும் என்பதனால் எத்தகைய காரணத்தைக் கொண்டும் கடற்கரைப் பகுதிகளுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும் செல்வி **க.ஸ்ரீபாலினி** அவர்களின் பாசமிகு தந்தையார்

## குமாரசாமி கனகலிங்கம்

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், நல்லூர்.**

(C-5450)

# மரண அறிவித்தல்

## மோசஸ் அருளானந்தம்

### (இளைப்பாறிய ஆசிரியர்)



**தோற்றம்** 29.11.1927 **மறைவு** 08.12.2022

மல்லாகம் குளமாங்காலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் அருளானந்தம் நேற்று (08.12.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான மோசஸ் - அடைக்கலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராயப்பு - சுவக்கீனாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி சிசிலின் (மலர் - இளைப்பாறிய ஆசிரியை) பாசமிகு கணவரும் இமாக்குலேற் மேரி (ரதி), கிங்ஸ்லி அலெக்ஸ் (பிரான்ஸ்), அனற் மேரி ஜோதினி (நியூசிலாந்து), ஜெனற் மேரி அமலினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோண் தேவதாசம், ஜீன் விஜிதா (பிரான்ஸ்), சோதிலிங்கம் மோகன்ராஜ் (நியூசிலாந்து), குணநாதன் ஜோசப் பிரதீபன் (பொது வைத்திய நிபுணர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந்த் (இங்கிலாந்து), மடோனா (இங்கிலாந்து), ஜெராட் (அவுஸ்திரேலியா), திபுசியஸ் (மருத்துவ விஞ் ஞான ஆராய்ச்சியாளர் - ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), ஜெனிற்றா (செலான் வங்கி), மரியா (KPMG), வேர்ஜினி (பிரான்ஸ்), யூலியட் (பிரான்ஸ்), டிலான் (பிரான்ஸ்), தியாகராஜன் (நியூசிலாந்து), அமுதினி (நியூசிலாந்து), செந்தூரன் (நியூசிலாந்து), சிந்துஜா (நியூசிலாந்து), தனுஷ் (நியூசிலாந்து), மரிய திவ்வியன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அருட்பணி மைக்கல் சவிரிமுத்து (அ.ம.தி) அவர்களின் மருமகனும் அருட்பணி பிரான்சிஸ் யோசப் (முன்னாள் அதிபர் - சம்பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.12.2022) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் 27/9, புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாண்டியன்தாழ்வு புனித் அன்னாள் ஆலயத்தில் 4.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து பரிசுத்த கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**27/9, புங்கன்குளம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(13718)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

### திருமதி

## லிங்கேஸ்வரி பொன்னுத்துரை



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் நவசக்தி உரும்பிராய் வடக்கை வாழிடமாகவும் கொண்ட திருமதி லிங்கேஸ்வரி பொன்னுத்துரை அவர்கள் கடந்த 07.12.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - குழந்தை தம்பதிகளின் இளைய புதல்வியும் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்தி - செல்லி தம்பதிகளின் மருமகளும் பொன்னுத்துரையின் அருமை மனைவியும் சுபாசினி (லண்டன்), கமலதாசன் (சுவிஸ்), அபிரா (பிரான்ஸ்), சுமித்திரா (சுவிஸ்), கண்ணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஞ்சலிங்கம் (பேபி - லண்டன்), வாகினி (சுவிஸ்), போசன் (பிரான்ஸ்), தர்மலிங்கம் (தர்மன்), றியானா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தபுதா, அஸ்வின், வர்சா, சிந்தி, அந்திரி, லோரா, ஆகர்சா, கபின், சானுயன், சாதுயன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான சின்னவன், மயிலு,. வெள்ளையர், வேலுப்பிள்ளை, நாகேந்திரம் மற்றும் இலட்சுமி, தேவி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2022) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவசக்தி,**
**உரும்பிராய் வடக்கு.**

(C-5449)

தகவல்:-
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவளிக்க இந்தியா ஒரு போதும் பின்வாங்காது

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர்

(டில்லி)

**நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை என்றால், இந்தியா தனது பொறுப்பைத் தட்டிக்கழிப்பதாக அமைந்துவிடும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.**

சுதந்திரத்திற்குப் பின் னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் போது, அந்த நாட்டுக்கு, இந்தியா வழங்கிய பொருளாதார ஆதரவு, முழு இலங்கை நாட்டிற்கும் உரியது அன்றி எந்தவொரு இனவாத அணுகுமுறையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வரைவுத் தீர்மான வாக்கெடுப் பில் கலந்து கொள்ளாமை தொடர்பில், கருத்துரைத்த ஜெய்சங்கர், அது இந்தியா வின் நீண்டகால நிலைப் பாட்டிற்கு இணங்க மேற் கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

இலங்கை தேசத்திற்கான ஆதரவில், தமிழ் சமூகத்தையும் உள்ளடக்கிய முழு இலங்கைக்கும் இந்தியா ஆதரவளிக்கிறது. எனவே ஆதரவு வழங்குவதில் எந்தவொரு இனவாத அணுகுமுறையும் எடுக்கப்படவில்லை என்று ஜெய்சங்கர் குறிப்பிட்டார். இந்தநிலையில் தமிழர்க ளின் உரிமைகளைப் பாது காப்பதற்காக கையொப்பமிடப்பட்ட 1987 ஆம் ஆண்டு



இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நிலை, தொடர்ந்தும் மாற்றங்களுக்கு அடிப்படையாக இருக்கும்என்று ஜெய்சங்கர் தெரிவித்தார். (நி)

# சீரற்ற காலநிலையால் கரையொதுங்கிய மீன்கள்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பூநொச்சி முனை கடற்கரையில் நேற்று சீரற்ற காலநிலை காரணமாக ஏராளமான மீன்கள் கரையொதுங்கின. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். (நி)

# இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சதவீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் நிகழும் நாடுகளில் இலங்கை 6 ஆவது நாடாக இருப்பதாக தெரியவந்துள்ளது. தென் கிழக்கு ஆசியாவில் சர்வதேச பொலிஸாருடன் தொடர்பு டைய NARC வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் 30 பாதாள உலகக் குழுக்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# ஒரு கிலோ தோடம்பழம் 2 ஆயிரம் ரூபாய்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ தோடம்பழத்தின் விலை 1,990 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இறக்குமதி செலவு மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக தோடம்பழம் உள்ளிட்ட பழங்க ளின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக பழ இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன், இறக்குமதி செய்யப்பட்ட மூன்று தோடம்பழங்கள் 100 முதல் 200 ரூபாய் வரையிலான விலையில் விற்பனை செய்யப்பட்டன.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தோடம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் இறக்குமதி செய்யப்பட்ட தோடம்பழங்களே இலங்கை சந்தையில் அதிகம் விற்பனையாகின்றன. (நி)

# 4 ஆயிரம் கிலோ பீடி இலைகளுடன் 8 இந்தியர்கள் ஆழ்கடலில் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வந்த 4,000 கிலோ பீடி இலைகளுடன் இரண்டு மீன்பிடி படகுகளை வடமேற்கு கடலில் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.

கடற்பாதையில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் கடத்தல்களை கட்டுப்படுத்துவதற்காக இந்நாட்டு கடல் மற்றும் கடற்கரைகளை இணைத்ததாக கடற்படையினர் ரோந்து நடவடிக்கை மற்றும் தேடல் நடவடிக்கைகளை மேற் கொள்கின்றனர்.

அதன்படி மேற்கு கடற் படை கட்டளை பிரிவினருடன் இணைந்த இலங்கை கடற்படை கப்பல் சுரணிமல மூலம் வடமேற்கு கடற் பரப்பில் கடந்த 5 ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது சர்வதேச கடல் எல்லையை மீறி கல்பிட்டி கதிரமலை முனைக்கு அருகில் இந்நாட்டு கடல் எல்லைக்குள் நுழைந்த சந்தேகத்துக்கு இடமான இந்திய இரண்டு கடற்படை படகுகள் அவதானிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவ் வேளையில் அந்த இரண்டு இந்திய மீன்பிடிப் படகுகளில் 128 பொதிகளில் பொதி செய்யப்பட்டு சட்டவிரோதமாக இந் நாட்டுக்குள் கொண்டு வந்த 4000 கிலோ பீடி இலைகளுடன் இரண்டு மீன்பிடி படகுகளையும் 8 இந்திய சந்தேக நபர்களையும் கடற்படையினர் கைப்பற்றினார்கள். (நி)

# யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் வேகமெடுக்கும் டெங்கு

## தேசிய கட்டுப்பாட்டுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயின் பரவல் வேகமாக அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை இலங்கை தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளதுடன், 1,602 டெங்கு நோயாளர்கள் கடந்த வாரம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், குறித்த மாவட்டத்தில் மட்டும் 390 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் 272 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சென்ற வாரம் யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் கல்முனை மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மொத்தமாக இலங்கை முழுவதும் 68,928 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் இரு மடங்கில் டெங்கு தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 41 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிக அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# கட்டட திறப்பு விழா

(கிளிநொச்சி)

இலங்கை திறந்த பல்கலைக்கழக கிளிநொச்சி கற்கை நிலையத்தின் கட்டடத்திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)


கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
திரு. ச.கணேசரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி.
சின்னப்பிள்ளை சபாரத்தினம்
அவர்களின் மறைவுச் செய்தி
அறிந்து எமது கண்ணீர்
அஞ்சலியை செலுத்துகிறோம்.



C-5448

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 3 ஆம் அணி நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் வெற்றி தொடரை இழந்தது இந்தியா

இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற பங்களாதேஷ் அணி, தொடரையும் கைப்பற்றியுள்ளது.



டாக்காவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 271 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மெயிடி ஹசன் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களையும் மொஹமதுல்லா 77 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், வொஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டுக்களையும் சிராஜ் மற்றும் உம்ரான் மாலிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 272 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணியால், 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 266 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், பங்களாதேஷ் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 82 ஓட்டங்களையும் அக்ஸர் பட்டேல் 56 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், எபொட் ஹொசைன் 3 விக்கெட்டுக்களையும் மெயிடி ஹசன் மற்றும் சகில் அல்ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முஷ்டபிசுர் ரஹ்மான் மற்றும் மொஹமதுல்லா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, பந்துவீச்சில் 2 விக்கெட்டுகளையும் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட பங்களாதேஷ் வீரர் மெயிடி ஹசன் தெரிவு செய்யப்பட்டார். (4)




அகில இலங்கை சிறைச்சாலை திணைக்கள மட்ட பூப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் அங்குனுகொலபேலஷ சிறைச்சாலையில் இடம்பெற்றது. இந்நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையும் குறித்த போட்டியில் பங்கு பற்றியது. அந்த வகையில் யாழ்.சிறைச்சாலையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய, யாழ்.சிறையில் பணிபுரியும் உத்தியோகத்தர் R.நிஷாந் திறந்த தனி வீரர்களுகான போட்டியில் முதலிடம் பிடித்து வெற்றிப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். (படம்:-கஜிந்தன்)




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவி தங்கப் பதக்கத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவிகள் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றி சாதனையைப் பதிவு செய்துள்ளனர். (படங்கள்:-கனகராஜன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2741

சங்கவி




சாருஜன்




விபூசிகா




தருண்




சாமந்தி




தினேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தின் "சோதனைக் கலத்தின் சாதனைப் பெண்கள் ஆளுமையினை வெளிக் கொண்டு வரும்" நோக்கில் . கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொ ச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. படம் - (தேவானந்தன்)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022

16 Days of Activism against Gender Based Violence

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

"பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும், பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குவோம்"

"Create an atmosphere where Women & Girls feel Free and Secure".

(சி-5323)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)





சிவஸ்ரீ.இரா பத்மகுமாரக்குருக்கள் விண்ணில் இருந்து இறையாசி வழங்க

# தண்ணீரூற்று ஊற்றங்கரை அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய பாலஸ்தாபன வைபவம்– 2022

## விநாயகர் மெய்யடியார்களே!

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் பன்னெடுங்காலமாக வீற்றிருந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ சித்தி விநாயகர் திருவருள் துணையுடன் நிர்வாக சபையினர்கள், அடியார்கள், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் அன்பர்களின் பேருதவியால் பல திருப்பணிகளைச் செய்யக் கைகூடியுள்ளது. அதற்கு முன்னோடியாக நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 ஆம் நாள் ( 11.12.2022) ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்ஷத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையுள்ள மகர லக்கின சுபமுகூர்த்த வேளையில் பாலஸ்தாபன வைபவம் நிகழ திருவருள் பாலித்துள்ளது. அந்நேரமும் அதற்கு முன் நடைபெறும் கிரியாகாலங்களிலும் வந்து கலந்து தரிசித்துய்யுமாறு வேண்டுகின்றோம்.

## கிரியாகால விபரம்

10.12.2022 சனிக்கிழமை காலை 07.00 முதல் விநாயகர் வழிபாடு கணபதிஹோமம், அனுக்ஞை, வாஸ்துசாந்தி, பாலாலய சுத்தி, சிற்பி உபசாரம் முதலியனவும் மாலை 05.00 முதல் கடஸ்தாபனம்,கலாகர்சனம், யாகபூஜை, ஹோமம், தீபாராதனை,வேதசலனம் முதலியனவும் 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 06.00 முதல் விநாயக வழிபாடு, யாக பூஜை, ஹோமம், மகாபூர்ணாகுதி, தீபாராதனை, பிரிதிகள், தானங்கள், பாலஸ்தாபனாபிஷேகம், பூஜை ஆசிர்வாதம், ஆசியுரையுடன் நிறைவு பெறும்.

பாலஸ்தாபன கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குருமுத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள். கதிரமலை சிவன் தேவஸ்தானம்

ஆலய பிரதம குரு. சோ.ஜெனார்தன குருக்கள்

கட்டிட நிர்மாண ஸ்தபதி க. வினோஸ்ரீ

புதிய ஆலயதிருப்பணி அடிக்கல் நாட்டு வைபவம்.

மங்களமிகு சுபகிருது வருடம் தைமாதம் 22 ம் நாள் (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை பூரணைதிதி, சித்தயோகம், பூசநட்ஷத்திரம் கூடிய காலை 9.00 மணிமுதல் 10.30 வரை உள்ள சுபநேரத்தில் அடிக்கல் நாட்டு வைபவம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

(13706)

ஆலய பரிபாலன சபையினர், ஊற்றங்கரை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்.


# இராசிபலன்

09.12.2022
கார்த்திகை 23, வெள்ளிக்கிழமை
பிரதமை முற்பகல் 11.12 மணிவரை

மிருக சீரிடம் பிற்பகல் 3.03 மணிவரை
சுபநேரம் -6.18-7.48 மணிவரை
இராகுகாலம் -10.48-12.18 மணிவரை

சந்திராஷ்டமம்
விசாகம்,அனுசம்

வளவன்

**மேஷம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்வங்கள் நடைபெறலாம்,சவால்களை சாமாத்தியமாகச் சமாளிப்பீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்,மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**துலாம்**
தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியே மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மகரம்**
பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,செய் தொழி-லில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் 'மதிப்பும் மரியதையும் உயரும் நாள்,வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்**
தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்**
பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,தாழ்ந்த சுபாவமுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டும் நாள்.

**மிதுனம்**
ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்,போசன சுகமுண்டு.

**கன்னி**
காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக ப்ரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசடைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

நன்மை செய்வதால் நட்டம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் மேலும் அதிகரிக்கும்

## பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

**மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். இல்லை என்றால் பணத்தை அச்சடிக்க வேண்டும் அல்லது வற் வரியை அதிகரிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்கு வருமானம் இல்லை. பணத்தை அச்சிடவா? அப்போது ரூபாய் மதிப்பு குறைகிறது. எனவே வற் வரியை அதிகரிப்போம். வற் வரியை அதிகரித்த பிறகு, அது ஒரு பிரச்சினையாக மாறும்.

மூன்றாவதாக கட்டணத்தை உயர்த்த வேண்டும். மின்சாரம் தடைப்படலாம். எனக்கு அது பிடிக்கவில்லை. ஒரு மேம்பட்ட நிலை உள்ளது. எதுவாக இருந்தாலும் மின்சாரத்தை துண்டிக் காதீர்கள் என்று பெற்றோர் என்னிடம் கூறினார்கள்.

இதைப் பற்றி பேசினோம். இவற்றை அதிகரிக்க யாரும் விரும்பவில்லை. நாங்கள் அரசியலில் இருக்கிறோம். எங்கள் விருப்பம் என்ன? இழப்பு காரணமாக வெளியில் இருந்து உதவி பெற முடியாது. இதை நாம் தயக்கத்துடன் செய்ய வேண்டும்.

மக்கள் விரும்பாத முடிவுகளை எடுக்க வேண்டும். அதனால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. அனைவரும் இதனை பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4)





தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் அண்மையில் தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

(படம்:-மகாலிங்கம்)

## உள்ளூராட்சி தேர்தல்

# இறுதி வாரத்திற்குள் வேட்புமனுக் கோரல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இந்த மாதத்தின் இறுதி வாரத்திற்குள் கோருவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுக் கூடி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக, ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சி கேவா அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானியை வெளியிடவும் தீர்மானிக்கப் பட்டதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிகேவா குறிப்பிட்டுள்ளார். (4)



சீரற்ற காலநிலையால் மட்டக்களப்பு சாய்ந்தமருது மாளிகைக்காடு பிரதேசங்களில் நேற்றைய தினம் கடலரிப்பு அதிகமாகக் காணப்பட்டது.

# சைவசமயப் போட்டிகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் வைர விழாவை முன்னிட்டு நடைபெற விருந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த மட்ட போட்டியாளர்களுக்கான சைவசமயப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டிருப்பதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் நாளை 10 மற்றும் நாளை மறுதினம் 11 ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த போட்டிகள் 24 சனி மற்றும் 25 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளன. தனிநிலைப் போட்டிகள் 24 சனிக்கிழமையும் குழு நிலைப் போட்டிகள் 25 ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளன. (4-6-30)

# மலையகத்தில் மினி சூறாவளி நுவரெலியாவில் இருவர் பலி



(நுவரெலியா)

மலையகத்தின் பல பிரதேசங்களிலும் வீசிய மினி சூறாவளியினால் ஆங்காங்கே பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பாரிய மரங்கள் முறிந்து வீதிகளில் விழுந்துள்ளன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் மீதும் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

கடும் காற்றினால் நுவரெலியா மாவட்டம் வலப்பனை, உடப்புஸல்லாவை, ருப்பஹா, கந்தப்பளை ஆகிய பல இடங்களில் பாரிய மரங்கள் முறிவு ஏற்பட்டு பாதிப்புக்களை உருவாக்கியுள்ளது.

இராகலை புரூக்சைட் பகுதியில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றின் மீது மரம் வீழ்ந்து விபத்துக்கு உள்ளான நிலையில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி இரத்த வெள்ளத்துடன் உயிரிழந்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை உடப்புஸல்லாவை கல்கட பத்தனையில் வீடு மீது பாரிய மரக்கிளை வீழ்ந்து ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

வீதிப் போக்குவரத்தை சீர் செய்ய அங்கு மரங்களை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இதனால் இப்பிரதேசத்திற்கான போக்குவரத்து பாதிக்கப் பட்டுள்ளதுடன், வலப்பனை பிரதேசத்திற்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

பாரிய மரங்கள் காணப்படும் இடங்களில் வசிப்போர் அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் ரஞ்சித் அழகக்கோன் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (4)

## யாழ்.பல்கலையில்

# போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் நன்னடத்தை மற்றும் நல்வாழ்வு மையமும் தனிநபர் தொழில்முறை விருத்திக்கான துறையும் இணைந்து நடத்தும் போதைப்பொருள் பாவனையும் அதன் பல்வகைக் கண்ணோட்டமும் பிரதிபலிப்புகளும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், "தற்காலத்தில் போதைப்பொருள் பற்றிய நிலவரமும் அது தொடர்பான எமது நடவடிக்கைகளும்" பற்றி மருத்துவர் க.குமரனும், "மனித உரிமைகளும் போதைப் பொருளுக்கு அடிமையாதலும்" பற்றி முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதனும் "போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர்பான சட்டம் சார்ந்த ஓர் அறிமுகம்" பற்றி குற்றவியல் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவும் "போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் உளவியல் அம்சங்கள்" பற்றி யாழ்.போதனா மருத்துவமனை மனநல மருத்துவ நிபுணர் டி.உமாகரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பெருநிலப்பரப்பில் மீண்டும் அரியதொரு தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

சிங்கள கல்வெட்டுகளிலும் பாளி, சிங்கள இலக்கியங்களிலும் வட இலங்கை வடகர(வடகரை), படகர (ப/வ) என அழைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழக கல்வெட்டுக்களில் வடகரை நாடு பற்றி பல குறிப்புகள் காணப் படுகின்றன. இதனால் இக்கல்வெட்டில் வரும் வடகரைநாடு என்பது எந்த நாட்டைக் குறிக்கின்றதென்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.


இக்கல்வெட்டு மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் பற்றிக் கூறுகின்றது. மதிமான் பஞ்சரன் பற்றிய சில சான்றுகள் இடைக்கால இலங்கைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆயினும் பேராசிரியர் சுப்பராயலு இப்பெயர் கொண்ட படைப்பிரிவு தமிழகத்தில் இருந்ததற்கு சான்றுகள் இல்லை எனக் கூறுகின்றார்.

இதனால் இப்படைப் பிரிவை இலங்கைக்கு உரியதாகப் பார்க்க இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் உறுதிப் படுத்த வேண்டும். இன்று காடாகக் காணப்படும் கோடலிபறிச்சான் இற்றைக்கு 1000 இற்கு முன்னரும் காடாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. ஏனெனில் இக் கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இவ் இடத்தில் கோயில் மடம், சிறுகுளம், கிணறு இருந்தன என்ற புதிய செய்தியைத் தருகின்றது.

இவற்றில் இருந்து இங்கு இந்து ஆலயம் இருந்துள்ளமை உறுதியாகத் தெரிகின்றது. இக்கூற்றைத் தற்போது அழிவடைந்து காணப்படும் கேணியும் அதைச்சுற்றி பரவலாகக் காணப்படும் பொழிந்த வெள்ளைக் கருங்கல் தூண்களும் அருகிலே காணப்படும் உயர்ந்த மண்மேடுகளும் உறுதிசெய்கின்றன. அவ்விடங்களில் அகழ்வாய்வுகள் செய்யப்படுமானால் அந்த உண்மை மேலும் உறுதி செய்யப்படலாம்.

இங்கிருந்த ஆலய மடம், சிறு குளம், கிணறு என்பன தமிழ்ப்படை வீரர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்டமையும் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை அப்படைவீரர்கள் ஏற்றுக் கொண்டமை பற்றியும் இக்கல்வெட்டுக் கூறுவது அதிமுக்கிய வரலாற்றுச் செய்தியாக உள்ளது.

இவற்றில் இருந்து சோழர் ஆட்சியின் முடிவோடு வடஇலங்கை பொலநறுவையின் பண்பாட்டு வட்டத்தில் இருந்து படிப்படியாக விடுபட்டு வருவதை இச்செய்தி உணர்த்துவதாக உள்ளது. அண்மைக்காலங்களில் இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்த வரலாற்று நூல்களும் கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புக்களும் 1070 இல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப்போக்குடன் தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப்பெற்று வந்ததை வெளிப்படுத்துவதாக உள்ளன. இதற்கு உதாரணமாக சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்விடத்தில் குறிப்பிடலாம்.



சோழரை வெற்றி கொண்ட முதலாம் விஜயபாகு தனது அரசையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க சோழர்காலப் படைவீரர்களிலேயே தங்கியிருந்தான். ஆயினும் அவன் சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு அப்படை வீரர்களை வேண்டிய போது அதை ஏற்க மறுத்த தமிழ்ப் படைவீரர்கள் பொலநறுவை அரசின் மீது படையெடுத்து அவ்வரசை வெற்றி கொண்டனர்.

சூளவம்சம் இப்படைவீரர்கள் வட இலங்கையில் உள்ள மகாதீர்த்த, மட்டிகாவட்டதீர்த்த ஆகிய இடங்களில் தங்கியிருந்தே இப்படையெடுப்புகளை மேற்கொண்டதாகக் கூறுகின்றது. அவற்றுள் மகாதீர்த்த என்ற இடம் மாதோட்டதுறைமுகத்தைக் குறிக்கின்றது. மட்டிகாவட்டதீர்த்த என்ற இடம் பாளி இலக்கியத்தில் முதன் முறையாகக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்விடம் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள மட்டுவில்நாடு என்ற இடமாக இருக்கலாம். இரண்டாம் இராதிராச சோழனது பல்லவராயன்பேட்டை மற்றும் திருவாலங்காடு சோழக் கல்வெட்டுகள் வடஇலங்கையில் மாதோட்டம், புலச்சேரி முதலான் இடங்களுடன் மட்டிவால் என்ற இடத்தையும் சோழப் படைகள் வெற்றி கொண்டதாகக் கூறுகின்றது.கல்வெட்டில் கூறப்படும் மட்டிவால் தற்போது பேச்சு வழக்கில் உள்ள மட்டுவில் நாடாக இருக்கலாம். இவ்விடத்திலும் போர்த்துக்கேயர்காலக் கோட்டை கட்டப்பட்டதற்கு இவ்விடம் துறைமுக நகராக இருந்ததே முக்கிய காரணமாகும்.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் ஹோமாறன்கடவல (குமரன்கடவை) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து 1215 இல் பொலநறுவையை வெற்றி கொண்டு ஆட்சிபுரிந்த கலிங்கமாகன் வடகலிங்கத்தில் இருந்தோ அல்லது மலேசியாவில் இருந்தோ படையெடுக்கவில்லை, மாறாக அவன் ஹோமாறன்கடவலவில் இருந்த சோழப்பிரதிநிதியால் அல்லது சோழப் படைத்தளபதியால் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டவன் என்ற புதிய செய்தி தெரிய வந்துள்ளது.

மேலும் 1070 இல் பொலநறுவையில் சோழர் ஆட்சி வீழ்ச்சியடைந்தாலும் அவர்களின் ஆதிக்கமும், நிர்வாக ஒழுங்கும் தமிழர் பிரதேசத்தில் ஐரோப்பியர் காலம்வரை தொடர்ந்தமையும் இக்கல்வெட்டால் அறியப்படும் புதிய சான்றாகும்.



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் (யாழ்.பல்கலைக்கழகம்)

பொலநறுவை வீழ்ச்சியைத் தொடர்ந்து கலிங்கமாகன் அரசு வட இலங்கையில் இருந்ததற்குப் பாளி, சிங்கள இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வரசின் தலைநகர் எது என்பதை இவ் இலக்கியங்கள் கூறாவிட்டாலும் அவனது படைநிலைகள், ஆதிக்கம் நிலவிய இடங்களாக புலத்திநகர (பொலநறுவை), கொட்டசார (திருகோணமலை கொட்டியாரம்), ஹறங்கதலக (கந்தளாய்), காகலய, பதிமாவட்டம் (பதவியா), குருந்தி (குருந்தலூர், குருந்தலூர் மலை), மானாமத் (இவ் இடம் ஹோமாறன்கடவல கல்வெட்டில் கூறப்படும் மாநாமத்(து) நாடாக இருக்கலாம்), மகாதித்த (மாதோட்டம்), மன்னார (மன்னார்), புலச்சேரி, கோணா மாவட்டம் (கோணாவில்), மதுபதித்த (இலுப்பைக்கடவை), சூறதித்த (ஊர்காவற்றுறை), வலிகாம (இவ்விடம் மன்னார் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் என்ற இடமாக இருக்கலாம்).

இவ்விடங்களிலேயே கலிங்கமாகனுக்கு பின்னர் ஆட்சி புரிந்த சாவகன் காலத்திலும் அவன் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததை பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்விடங்களில் பெரும்பாலனவை திருகோணமலை உள்ளிட்ட வடபகுதியில் காணப்படுகின்றன. அவ்விடங்களில் சாகவன் ஆட்சி நிலவியதை தமிழக



புதுக்கோட்டை குடுமியாமலையில் உள்ள 1262 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது.

கலிங்கமாகனுக்குப் பின்னர் இலங்கை மீது இரண்டாவது தடவையாகப் படையெடுத்த சாவகன் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய, சோழப் படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கி பதி (பதவியா), குருந்தி (குருந்தலூர்) ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு தம்பதேனிய அரசு மீது படையெடுத்தான் எனச் சூளவம்சம் கூறுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா இவன் சுதந்திர மன்னனாக இருந்தே இப்படையெடுப்பை மேற்கொண்டான் எனக் கூறுகின்றார்.

மேலே கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் கோடலிபறிச்சான் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய சிறு அறிமுகமாகும். இக் கல்வெட்டு இலங்கைத் தமிழரின் அதிலும் குறிப்பாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசியல் வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு மற்றும் இடப்பெயர் பற்றி ஆய்வில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது.

ஆகவே இக்கல்வெட்டை ஆராய்வதற்கு பலதுறை சார்ந்த புலமையாளரின் பங்களிப்பு மிக அவசியமாகும். இவற்றைக் கருத்தில் கொண்டே இக்கல்வெட்டின் நான்காவது பக்கத்தில் தெளிவற்றுக் காணப்படும் சில வரிகளை மீண்டும் படியெடுத்ததன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சுப்பராயலு, பேராசிரியர் இரகுபதி மற்றும் கலாநிதி. இராஜகோபால் ஆகியோரிடன் இணைந்து இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை முழுமையாகப் பதிவுசெய்ய உள்ளோம். அவற்றின் பெறுபேறுகள் இரு மொழிகளில் வெளியிடப்படும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 47





"சோதிடரே! அதையும் தங்கள் சோதிடத்திலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா?" என்றாள் குந்தவை. "ஆகட்டும் தாயே!" என்று கூறிச் சோதிடர் கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் ஏதோ மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

பிறகு கண்ணைத் திறந்து பார்த்து, "கோமாட்டி, இந்தக் கன்னிப் பெண்ணின் ஜாதகம் பற்றிக் கேட்பதற்காகவே இன்று முக்கியமாக வந்திருக்கிறீர்கள். அவ்விதம் தேவி பராசக்தியின் அருள் சொல்கிறது உண்மைதானா?" என்றார்.

"ஆஹா! பிரமாதம்! உங்களுடைய சக்தியை என்னவென்று சொல்வது? ஆம் சோதிடரே! இந்தப் பெண்ணைப் பற்றிக் கேட்கத் தான் வந்தேன். ஒரு வருடத்துக்கு முன்பு இவள் பழையாறை அரண்மனைக்கு வந்தாள். வந்து எட்டு மாத காலம் மிகக் குதூகலமாய் இருந்து வந்தாள்.

என் தோழியருக்குள்ளே இவள் தான் சிரிப்பும் விளையாட்டும் கலகலப்புமாக இருந்து வந்தாள். நாலு மாதமாக இவளுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. அடிக்கடி சோர்ந்து போகிறாள். பிரமை பிடித்தாற்போல் இருக்கிறாள்; சிரிப்பையே மறந்து விட்டாள். உடம்புக்கு ஒன்றுமில்லை என்கிறாள். இவள் பெற்றோர்கள் நாளைக்கு வந்து கேட்டால், என்ன மறுமொழி சொல்வதென்றே தெரியவில்லை"

"தாயே! கொடும்பாளூர் கோமகளின் செல்வப் புதல்வி தானே இவர்? இவருடைய பெயர் வானதி தானே?" என்றார் சோதிடர். "ஆமாம் உமக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே!"

"இந்த அரசிளங்குமரியின் ஜாதகம் கூட என்னிடம் இருக்கிறது. சேர்த்து வைத்திருக்கிறேன்! சற்றுப் பொறுக்க வேணும்!" என்று சொல்லிவிட்டு, சோதிடர் பக்கத்திலிருந்த ஒரு பழைய பெட்டியைத் திறந்து சிறிது நேரம் புரட்டினார். பிறகு, அதிலிருந்து ஒரு ஜாதகக் குறிப்பை எடுத்துக் கவனமாய்ப் பார்த்தார்.

## பதினோராம் அத்தியாயம்
## திரும்பிரவேசம்

இந்நாளில் கும்பகோணம் என்ற பெயரால் ஆங்கில அகராதியிலே கூட இடம்பெற்றிருக்கும் நகரம், நம்முடைய கதை நடந்த காலத்தில் குடந்தை என்றும் குடமூக்கு என்று வழங்கப்பட்டு வந்தது. புண்ணிய ஸ்தல மகிமையையன்றி, 'குடந்தை சோதிடராலும் அது புகழ் பெற்றிருந்தது. குடந்தைக்குச் சற்றுத் தூரத்தில் தென்மேற்குத் திசையில் சோழர்களின் இடைக்காலத் தலைநகரமான பழையாறை, வானை அளாவிய அரண்மனை மாடங்களுடனும் ஆலய கோபுரங்களுடனும் கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

பழையாறை அரண்மனைகளில் வசித்த அரச குலத்தினர் அனைவருடைய ஜாதகங்களையும் குடந்தை சோதிடர் சேகரித்து வைத்திருந்தார். அப்படிச் சேகரித்து வைத்திருந்த ஜாதகங்களைப் புரட்டித்தான் கொடும்பாளூர் இளவரசி வானதியின் ஜாதகத்தை அவர் கண்டெடுத்தார்.

சிறிது நேரம் ஜாதகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பிறகு, சோதிடர் வானதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். திரும்ப ஜாதகத்தைப் பார்த்தார். இப்படி மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர, வாயைத் திறந்து ஒன்றும் சொல்லுகிற வழியைக் காணவில்லை.

"என்ன, சோதிடரே! ஏதாவது சொல்லப் போகிறீரா, இல்லையா?" என்று குந்தவைதேவி கேட்டாள். "தாயே! என்னத்தைச் சொல்வது? எப்படிச் சொல்வது? முன் ஒரு தடவை தற்செயலாக இந்த ஜாதகத்தை எடுத்துப் பார்த்தேன். என்னாலேயே நம்ப முடியவில்லை இப்படியும் இருக்க முடியுமா என்று சந்தேகப்பட்டு வைத்து விட்டேன். இப்போது இந்தப் பெண்ணின் திருமுகத்தையும் இந்த ஜாதகத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, திகைக்க வேண்டியிருக்கிறது!"

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



# அளவில்லையே!

பட்டணத்தில் அவன் ஒரு சத்திரத்தை அணுகியபோது மாலைப் பொழுதாகிவிட்டது. சத்திர வாசலில் அழகிய பெண் ஒருத்தி நின்று கொண்டிருப்பதை அவன் கண்டான். அவளை மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை அவன் மனதில் எழுந்தது. அவன் உடனே குதிரை மீது இருந்து இறங்கி சத்திரத்துக் கணக்கனிடம் போய் தான் தங்க இடம் வேண்டுமென்று கேட்டான்.


ஏழை பார்த்த பெண் அந்தக் கணக்கனின் ஒரே மகள். அவளை மணந்து கொண்டால் தான் அச்சத்திரத்திலேயே இருந்து சுகமாகக் காலம் கழிக்கலாமென அவன் எண்ணினான். அவன் தன் குதிரையைக் கணக்கனிடம் ஒப்படைத்து "இதை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். இது சாதாரணக் குதிரையல்ல, மிக விலையுயர்ந்தது" என்றான்.

கணக்கன் அக்குதிரையைப் பிடித்துக் கொண்டு போகும் போது அது அவனது பிடியிலிருந்து நழுவி ஓடி விட்டது. கணக்கன் ஓடி வந்து ஏழையிடம் குதிரை போய் விட்டதைக் கூறவே ஏழையும் "நான் தான் அதை கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னேனே. நீ தான் அஜாக்கிரதையாக இருந்து விட்டாய். நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. நாளை காலைக்குள் என் குதிரை எனக்குக் கிடைத்தாக வேண்டும்" என்றான்.

அப்போது கணக்கன் "அதை நான் எங்கே போய்த் தேடுவேன்? அதற்கு பதிலாக என்ன கேட்டாலும் கொடுக்கிறேன்" என்றான். ஏழையும் "அப்படியானால் உன் மகளை எனக்குக் கல்யாணம் செய்து வை" என்றான். கணக்கனும் "இது என் மகளைக் கேட்டு முடிவு செய்ய வேண்டும். சற்று நேரத்தில் வந்து முடிவு சொல்கிறேன்" என்று கூறிவிட்டுப் போனான்.

கணக்கன் தன் மனைவியுடனும் மகளுடனும் அது பற்றிக் கலந்து யோசித்தான். அவர்களுக்கு அந்த விவாகத்தில் இஷ்டமே இல்லை. ஆனாலும் அந்த ஏழையின் பிடியிலிருந்து தப்பக் கணக்கனின் மனைவி ஒரு யோசனை கூறினாள். அதைக் கணக்கன் ஏற்றான்.

அவள் அந்த ஏழையைக் கண்டு "ஐயா! எங்களுக்கு இந்தத் திருமணம் சம்மதமே. ஆனால் என் மகள் இஷ்டமில்லை என்று முரண்டு பிடிக்கிறாள். அவளை நான் ஒரு சாக்குப் பையில் போட்டுக் கட்டித் தருகிறேன். நீங்கள் இப்போது அதைச் சுமந்து கொண்டு வெகு தூரம் போய் விடிந்ததும் ஏதாவது ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டு விடுங்கள். அதன் பிறகு அவளோடு இங்கே வந்து விடுங்கள்" என்றாள்.



ஏழையும் அதற்குச் சம்மதிக்கவே சற்று நேரத்தில் கணக்கனின் மனைவி ஒரு மூட்டையைக் கொண்டு வந்து கொடுத்தாள். ஏழையும் மறுநாள் காலை தான் அழகிய பெண்ணை மணக்கப் போவது பற்றி எண்ணி மகிழ்ந்தவாறே சத்திரத்திலிருந்து மூட்டையைச் சுமந்து கொண்டு கிளம்பினான்.

இரவு முழுவதும் நடந்து காலையானதும் அவன் தான் கண்ட முதல் கோவிலில் மூட்டையை இறக்கி அதன் வாயை அவிழ்த்து "பெண்ணே! வெளியே வா இங்கு தான் நம் திருமணம்" என்றான்.

மறுநிமிடம் அந்த சாக்கப் பையிலிருந்து ஒரு பெரிய நாய் வெளி வந்து அவனது மூக்கைக் கடித்து முகத்தைப் பிராண்டி விட்டு ஓடியது.

அவ்வளவுதான்! அவனது ஆசை அத்தோடு முடிந்து விட்டது. அவன் முன் போல் ஊர் ஊராகத் திரிந்து பிச்சை எடுக்கலானான்!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.

– அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிகரித்த வட்டி வீதம் பற்றிய தகவலை தெரியப்படுத்துங்கள்

தமிழனுக்குத் தமிழன் உதவி செய்வதில்லை என்ற கருத்து நிலை நம் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

இதில் நிறைந்த உண்மை உண்டென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது அரச ஊழியர்களுக்கு நான்கு வீத வட்டியில் சொத்துக் கடன் வழங்கப்பட்டது.

இருந்தும் எங்கள் தமிழ் அரச நிர்வாகிகளின் அசமந்தப் போக்கும் வட மாகாணத்திலுள்ள வங்கிகளின் காலதாமதமும் சேர்ந்து அரச சொத்துக் கடனை நம்மவர்கள் பெற்றுக் கொள்ள முடியாமல் போயிற்று.

அதேநேரம் சிங்கள, முஸ்லிம் அரச உத்தியோகத்தர்கள் குறித்த கடனை முழுமையாகப் பெற்றுக் கொள்ள, அத்தோடு குறித்த சொத்துக் கடன் மட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் அதிகரித்த வட்டியில் குறைந்த தொகையை மட்டுமே நம்மவர்கள் கடனாகப் பெற முடிந்தது.

இதுபோல வீடுகளுக்குச் சூரிய மின்கலம் (Solar) பொருத்துவதற்காக வங்கிகள் மூலம் நான்கு வீத வட்டியில் கடன் வழங்கப்பட்டது.

ஆனால் அந்நேரம் நம் வடபுலத்தில் சூரிய மின்கலத்தைப் பொருத்துவதற்கான அனுமதி வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது வட்டி வீதமும் அதிகரித்து சூரிய மின்கலத்தின் விலைகளும் அதிகரித்துவிட, நம் மக்கள் எதுவும் செய்ய முடியாத அவல நிலைக்கு ஆளாகினர்.

இவற்றைக்கூறும்போது, இன்னொரு சம்பவம் நம்மத்தியில் தற்போது நடந்து வருவது வேதனை தருகிறது.

அதாவது நாட்டின் பொருளாதார நிலையில், வங்கிகள் நிரந்தர வைப்புகளுக்கு 30 வீதத்துக்கு மேலான வட்டியை வழங்குகின்றன.

எனினும் ஏலவே நிரந்தரக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்தவர்களுக்கு ஏழு, எட்டு வீதமே வட்டியாக வழங்கப்படுகிறது.

வட்டிவீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்புத் தெரியாத நம் அப்பாவி மக்கள் மிகக் குறைந்த வட்டியைப் பெற்றுக் கொள்வதைப் பார்க்கும் போது வயிறு பற்றி எரிகிறது.

ஆம், தங்களின் நிரந்தர வைப்பை மீளப் பெற்று புதிய வட்டி வீதத்துக்கு மாற்ற வேண்டும் என்ற தகவல் தெரியாததால் அல்லது தெரியப்படுத்தாததால் அந்த மக்கள் ஏமாற்றமடைகின்றனர்.

என்ன செய்வது, ஒரு குறிப்பிட்ட தொகையை நிரந்தர வைப்பிலிட்டு அதிலிருந்து வருகின்ற சொற்ப வட்டி வருமானத்தில் சீவியம் நடத்துகின்ற எத்தனையோ முதியவர்கள் ஏழைக் குடும்பத்தினர் இருக்கின்றனர்.

எனினும் அவர்களுக்கு வட்டிவீத அதிகரிப்பைத் தெரியப்படுத்தாமல், மறைப்புச் செய்து வங்கிகளுக்கு உழைத்துக் கொடுப்பது தர்மம் அன்று. அது பாவச் சொத்து.

ஆகையால் எங்கள் மண்ணில் இயங்கும் வங்கிகள் நம் மக்களின் நிரந்தர வைப்புகளுக்கு உயர்ந்த வட்டி வீதம் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

## பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களை கண்டறிந்து தண்டனை பெற்று கொடுக்க தயார்

### ஜனாதிபதி ரணில் சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய காரணமானவர்களை கண்டறிந்து தண்டனை பெற்றுக்கொடுக்க நான் தயார். பாராளுமன்றம் அனுமதித்தால் அதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது பாராளுமன்ற தெரிவுக் குழு அமைக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கபீர் ஹாசிம் முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கபீர் ஹாசிம் எம்.பி. தெரிவிக்கையில், மின்சார சபையின் நட்டத்தை ஈடுசெய்ய மின் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர மாற்று வழி இல்லை என நீங்கள் தெரிவித்தீர்கள்.

மக்கள் இதனை பொறுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தீர்கள். மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது. இதற்காக மக்கள் அர்ப்பணித்து இருக்கின்றனர்.

ஆனால் எங்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது. அதாவது, இந்த பொருளாதார நெருக்கடி 2020 இல் மேற்கொள்ளப்பட்ட பிழையான தீர்மானங்கள் காரணமாக இடம்பெற்றதாக ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பிழையான தீர்மானங்களை எடுத்த அதிகாரிகள் அரசியல்வாதிகள் இன்னும் சுதந்திரமாக செயற்படுகின்றனர்.

குறிப்பாக நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ கடன் வழங்குவதை நிறுத்துவதாக தெரிவித்தார். அதே போன்று நிவாட் கப்ரால் டொலர் வருவதாக தெரிவித்து பாராளுமன்றத்தை பிழையாக வழிநடத்தினார்.

இவர்களுக்கு எதிராக இன்றுவரை விசாரணை எதுவும் இடம்பெறவில்லை. அதனால் இவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஆரம்பமாக ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து நாட்டுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். முறையாக விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன் என்றார்.

இதற்கு ஜனாதிபதி தொடர்ந்து பதிலளிக்கையில், பாராளுமன்றம் அனுமதித்தால் ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கலாம். எல்லோரும் இணக்கம் என்றால் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்போம்.

இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. எமது இந்த முறைமையில் பல கட்டமைப்புகளில் பிரச்சினைகள் இருக்கின்றன. வரி சலுகை வழங்கியமையே இந்த பிரச்சினைக்கு காரணம் என முன்னாள் ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால் ஆரம்பமாக எமது கட்டமைப்பில் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்றார். (ம-7)

## தனி ஆங்கில மொழியில் சட்டக் கல்லூரி அனுமதி பரீட்சை

### வர்த்தமானியை இரத்து செய்ய யோசனை

இலங்கையின் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தனி ஆங்கில மொழியில் தோற்ற வேண்டும் என்பதை ரத்துச்செய்யும் வகையில், அடுத்த வாரம் பாராளுமன்றில் குறித்த வர்த்தமானி முன்வைக்கப்படவுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனை நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் மற்றும் ஏனைய தரப்புக்கள் தொடர்ந்தும் விடுத்து வரும் கோரிக்கைக்கு இணங்க இதனை தாம் பாராளுமன்றில் முன்வைப்பதாக நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டக்கல்லூரிக்கான அனுமதிப் பரீட்சைக்கு ஆங்கில மொழியில் மாத்திரமே தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானி முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரியால் வெளியிடப்பட்டது.

எனினும் இதனை மூன்று வருடங்களுக்கு பின்னர், நடைமுறைப்படுத்துமாறு தாம் விடுத்த கோரிக்கையை, நீதி கல்விச்சபை நிராகரித்துள்ளதாக நீதியமைச்சர் நேற்று பாராளுமன்றில் கூறினார். (ம-7)

## உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இந்த மாதத்தின் இறுதி வாரத்திற்குள் கோருவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கூடி இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அதன்படி அரசியலமைப்பின் 98 ஆவது சரத்தின் 08 ஆவது உபசரத்திற்கு அமைய, உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்கான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** விமானப்படை முகாம்- வேளாங்குளம், மடு குளம், பூவரசங்குளம், புலவனூர், சாளம்பைக்குளம், சாளம்பைக்குளம் வீட்டுத் திட்டம், செங்கற்படை, சின்னத்தம்பனை (மடுகுளம்), சோபாலா புளியங்குளம், தாலிக்குளம், வேளாங்குளம், நெளுக்குளம் நீர் வழங்கல் சபை, நந்தெனிய கல்லுடைக்கும் ஆலை, குளோப் அரிசி ஆலை, அறுகம்புல் வெளி, அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், குட் சட் வீதி, கூமாங்குளம், மகாறம்பைக் குளம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பண்டாரிக்குளம், பாண்சின்னக்குளம், பெரிய உளுக்குளம், தீவர கம, பொன்னாவரசங் குளம், இராஜேந்திர குளம், சாம்பல்தோட்டம் வீட்டுத்திட்டம், சேவா லங்கா- தவசிக்குளம், தோணிக்கல், சூடுவெந்தபுலவு தொலைத் தொடர்பு கோபுரம், சூடுவெந்தபுலவு, தவசிக்குளம், தோணிக்கல், தோணிக்கல்- லக்ஸபனா வீதி, துடாரிக் குளம்,ட்ராக் 07, பாவற் குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு, விநாயகபுரம் வீட்டுத்திட்டம்,நீர் வழங்கல்- (மதவு வைத்த குளம்), பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக் கழகம் வவுனியா வளாகம், சாளம்பை புதிய வீட்டுத் திட்டம், சாளம்பைக் குளம் பல்கலைக் கழக வளாகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மலையில் கடல் நீர் குடிமனைகளுக்குள் புகும் அபாயம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு செம்மலையில் கடல் நீர் குடிமனைகள், மற்றும் விவசாய நிலங்களுக்குள் உட்புகுவதைத் தடுப்பதில் கரைதுறைபற்று பிரதேச சபையினரும்கிராம மக்களும்இணைந்து செயற்பட்டு வருவதாக கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

செம்மலை கடலில் இருந்து குடிமனைகள், விவசாய நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுவதாக நேற்று முற்பகல் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து கரைதுறைபற்று பிரதேச சபையின் கனரக வாகனத்தின் உதவியுடன் கிராம மக்களும் இணைந்து கடல் நீர் பரவுவதை தடுத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் இப்பகுதியில் இடம்பெற்ற சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாகவே கடல் நீர் குடிமனைகள், விவசாய நிலங்களுக்குள் பரவும் நிலை ஏற்பட்டதாக கிராம மக்களினால் தெரிவிக்கப்பட்டதாக கரைதுறை பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (4-6-350)

# மாந்தை கிழக்கு மாணவர்களுக்கு பேருந்து வசதி வேண்டும்

## பெற்றோர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாடசாலைகளுக்கு சென்று திரும்புவதில் மாணவர்கள் தொடர்ச்சியாக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தை கிழக்கில் இருந்து துணுக்காய் வரை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று திரும்பக்கூடிய நிலைமை காணப்பட்டது. அதன் பின்னர் காலையில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பிற்பகலில் வீடு திரும்ப முடியாத நிலைமை காணப்பட்டது.

அதற்கான பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக மாணவர்கள் நெருக்கடியினை எதிர்கொண்டனர். ஆனால் தற்போது நட்டாங்கண்டலில் இருந்து காலை 5.40 மணிக்கு பயணிக்கும் தனியார் பேருந்து மீளவும் அதே வழித்தடத்தில் மாலை 5 மணிக்கே நட்டாங்கண்டலுக்கு திரும்புவதனால் பாடசாலைகளுக்கு செல்வதிலும் திரும்புவதிலும் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நெருக்கடி தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் பெற்றோர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டும் பயன்கள் கிடைக்கவில்லை. மாந்தை கிழக்கிற்கு மாணவர்களின் போக்குவரத்து நலன் கருதி அரச,தனியார் பேருந்து சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

# வீதி சீரின்மையால் தொழிலாளர்கள் பாதிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் துறையில் கடற் றொழிலை பிரதான மாக கொண்ட 350 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர்.

குறிப்பாக பருவகால இறால் தொழிலை பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். பருவகாலம் ஆரம்பித்தால் இறால் உற்பத்தி அதிகரிக்கும் இந்த நேரத்தில் தாம் பிடிக்கின்ற இறால்களை உரிய முறையில் சந்தைப்படுத்த வீதிசீர் இன்மையால் குன்றும் குழியுமாக காணப்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இறாலை வாங்குவதற்கு வியாபாரிகளும் வரமுடியாத நிலையில் உழவியந்திரங்களைப் பயன்படுத்தி இறால்களை கொண்டு வந்து தமது வாகனத்தில் ஏற்றுவதால் வியாபாரிகளுக்கும் இரட்டிப்பு செலவாகிறது. குறித்த வீதியை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

பல முறை பல அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் வீதி புனரமைக்கவில்லை எனவும் கடற்றொழில் அமைச்சர் கவனம் செலுத்தி வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (4-6-316)

# போதை மூலம் நாட்டை அழிக்க சர்வதேச சதித்திட்டம்-நீதியமைச்சர்

(கொழும்பு)

போதைப்பொருள் பரவல் காரணமாக அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் நாட்டில் இளம் சமுதாயம் என்ற ஒன்று மீதமிருக்காது எனவும் நாட்டை அழிக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள பிரபல பாடசாலைக்குள் ஐஸ்என்ற போதைப் பொருள் பரவியுள்ளது. பெண்கள் பாடசாலைகளுக்குள் இந்த போதைப்பொருள் சென்றுள்ளது.

ஐஸ் போதைப் பொருளை பயன்படுத்துவோர் இரண்டு வருடங்களில் அவர்களின் மூளையில் உள்ள உயிரணுக்கள் இறந்து, அவர்கள் இறந்து விடுவார்கள். நாட்டில் சுமார் 5 இலட்சம் இளைஞர், யுவதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்காது போனால், இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாக மாறுவதை தடுக்க முடியாது. தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டை முற்றாக அழிக்கும் சதித்திட்டம், சூழ்ச்சி தற்போது முன்னெடுக்கப்படுகிறது. உண்மை நிலவரம் என்னவென்று தெரியாது. பாடசாலைகளுக்கு இடையில் ஐஸ் போதைப் பொருளை விநியோகிக்க வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அந்த போதைப் பொருள் இலவசமாக விநியோகிப்பதாக புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

போதைப் பொருள் பாவனையில் இருந்து இளம் சமுதாயத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன் எனவும் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

## வவு.மாவட்டத்தில்

# 5326 விவசாயிகளுக்கு இலவச உர விநியோகம்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்திலே 2.5 ஏக்கருக்கு குறைவான அளவில் நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் 5326 விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரத்தினை பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததுடன், தனியார் துறையினரிடம் இருந்து அதிக விலை கொடுத்து உரத்தினை கொள்வனவு செய்ய வேண்டிய நிலையும் காணப்பட்டது.

இந்நிலையில் யுஎஸ்எய்ட் நிறுவனத்தின் பங்களிப்புடன் நாடு பூராகவும் உள்ள கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள கமநல சேவை நிலையங்களின் ஊடாக இலவசமாக உரம் வழங்கி வைக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-6-299)

## கடலட்டை பண்ணைக்கு எதிராக

# போராடிய மீனவர்கள் பிணையில் விடுதலை

(கிளிநொச்சி)

கிராஞ்சியில் அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத கடலட்டை பண்ணைக்கு எதிராக போராடிய மீனவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, நீதிமன்றம் அவர்களை பிணையில் செல்வதற்கு அனுமதியளித்துள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கிராஞ்சியில் அமைக்கப்பட்டிருக்கின்ற சட்டவிரோதமான கடல் அட்டைப் பண்ணைகளுக்கு எதிராக, ஜனநாயக வழியில் போராடிக் கொண்டிருக்கும் அப்பாவி மீனவ குடும்பங்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கானது நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேக நபர்களாக முற்படுத்தப்பட்ட மீனவர்களை பிணையில் விடுவித்த நீதிமன்றம் அடுத்த தவணை கடலட்டை பண்ணையாளர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கட்டளையிட்டிருந்தது எனத் தெரிவித்தார். (4-6-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 240 | 320 |
| தக்காளி | 230 | 250 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 200 | 200 |
| கோவா | 180 | 200 | 260 | 240 |
| கரட் | 200 | 380 | 400 | 450 |
| பூசணி | 80 | 140 | 100 | 120 |
| புடோல் | 150 | 220 | 150 | 200 |
| வாழைக்காய் | 160 | 140 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 600 | 700 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 550 | 450 | 450 | 600 |
| வெண்டக்காய் | 140 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 350 | 280 | 350 | 400 |
| லீக்ஸ் | 400 | 350 | 450 | 450 |
| பீற்றூட் | 400 | 300 | 320 | 400 |
| கறிமிளகாய் | 600 | 650 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 700 | 1000 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 180 | 200 |
| தேசிக்காய் | 300 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 240 | 160 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | 160 | 120 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43 மேலதிக...

தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், கடந்த நவம்பர் 14ஆம் திகதி சபையில் முன்வைக்கப்பட்ட பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் இடம்பெற்று, கடந்த 22ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது, 37 மேலதிக வாக்குகளால், இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சீரற்ற காலநிலை...

கடும் காற்று காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

உடபுசல்லாவை கல்கடபத்தன பகுதியில் நேற்றுக்காலை மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா ராகலையில் முச்சக்கர வண்டியொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றதுடன், முச்சக்கர வண்டி சேதமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையே, மாத்தறை தெனியாய அபரகடஹேன பகுதியில் நேற்று காலை மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான 54 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.(ம-7)

## பாடசாலை...

கிழமை விடுமுறை வழங்க கல்வி அமைச்சு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

வளிமண்டல சூழலை கருத்தில் கொண்டு நாளை (இன்று) பாடசாலை நடத்துவது தொடர்பாக கல்வி அமைச்சு முடிவெடுக்க வேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின் கட்டணத்தை...

மின் கட்டண திருத்தம் குறித்து, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க வெளியிட்ட கருத்து தொடர்பில், விசாரணை நடத்துவது குறித்து பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும், அது போதுமானதல்ல.

அடுத்த வருடம் 151 பில்லியன் நட்டம் ஏற்படவுள்ளது. 2013ஆம் ஆண்டு முதல் 300 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுவந்துள்ளது. அடுத்த வருடத்தில் வறட்சி ஏற்பட்டால் மேலும் 420 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படும். போதிய மழை கிடைத்தால் அது 300 பில்லியனை விட குறைய வாய்ப்பு உள்ளது என்றார். (ம-7)

## வடக்கில் காற்று...

வட மாகாணம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வங்காள விரிகுடாவின் தென் கிழக்கு கடற்பிராந்தியத்தில் உருவாகியுள்ள காற்றமுத்த தாழ்வு நிலை, சூறாவளியாக வலுவடைந்துள்ளதால் இந்த எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூறாவளிக்கு மண்டோஸ் Mandous என பெயரிடப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் மறுஅறிவித்தல்வரை கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மீனவர்களை உடனடியாக கரைக்கு திரும்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவின் தென் கிழக்கு கடற்பரப்பில் உருவான தாழமுக்கமானது மண்டோஸ் புயலாக மாறி மேற்கு, வடமேற்கு திசையில் நகர்வதால் தமிழகத்தின் வடக்கு, பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேச தென் பகுதி ஊடாக 9ஆம் திகதி இரவு கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

குறித்த காலப்பகுதியில் மழை வீழ்ச்சியானது 100 மில்லிமீற்றருக்கு அதிகமாக கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுவதுடன் கடலானது மிகவும் கொந்தளிப்பாக காணப்படும்.

மேலும், இந்தவேளையில் கடல் அலையின் உயரமானது 2.5 மீற்றருக்கும் 3.5 மீற்றருக்கும் இடைப்பட்டதாக காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே கடற்றொழிலுக்கு செல்வோர் குறித்த காலப்பகுதியில் கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

காற்றின் வேகமானது மணிக்கு 70 தொடக்கம் 90 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன் இது 100 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகையால் கரையோரப்பகுதி மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றார். (ம-7,33,104)

## வீட்டி...

"மண்டோஸ்" புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் மிதமான மழை மற்றும் அவ்வப்போது பலமாக காற்று வீசி வருகின்றது.

இந்நிலையிலேயே கரம்பன் பகுதியில் வீடொன்றின் மீது பனைமரம் முறிந்து விழுந்துள்ளது.

எனினும் உயிராபத்துக்கள் ஏற்படவில்லை எனவும், வீட்டின் ஒருபகுதி முற்றாக சேதமடைந்துள்ளது. (ம-7,33)

## ஆரோ...

காற்றின் தரம் மிகவும் ஆரோக்கியமற்ற நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் நேற்றைய தினம் இலங்கையின் பல நகரங்களில், காற்றின் தரச்சுட்டெண் 150 - 200 வரையாக நிலவியது.

இதனையே ஆரோக்கியமற்ற நிலை என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லை மற்றும் கொழும்பு உட்பட பல பகுதிகளில் காற்றின் தரச்சுட்டெண் 114 ஆகவும், மன்னாரில் காற்றின் தரச்சுட்டெண் 117 ஆகவும் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் 212ஆகவும், கம்பஹாவில் 189 ஆகவும், தம்புள்ளையில் 170 ஆகவும், கொழும்பில் 169 ஆகவும், கண்டியில் 161 ஆகவும், நீர்கொழும்பில் 170 ஆகவும், அம்பாந்தோட்டையில் 157 ஆகவும் காற்றின் தரச்சுட்டெண் பதிவாகியுள்ளது. (ம-7)

## குப்பிளானில்...

பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட போதை தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண்ணையும் பெண்ணிடம் மீட்கப்பட்ட போதைப் பொருளையும் மேலதிக நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7,33)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 08/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1418
வெற்றி இலக்கங்கள்: மீனம் 8 4 9 2 7 7

### தன நிதானய

திகதி - 2022.12.08
சீட்டிழுப்பு இலக்கம் - 993
ஆங்கில எழுத்து X; வெற்றி இலக்கங்கள் 09 51 57 58

### கொவிசெத

திகதி 2022.12.08; சீட்டிழுப்பு இலக்கம் 3205
ஆங்கில எழுத்து F; வெற்றி இலக்கங்கள் 13 33 68 75

### மெகா பவர்

திகதி 08/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1311
வெற்றி எழுத்து Q; சுப்பர் இலக்கம் 06; வெற்றி இலக்கங்கள் 05 59 62 64

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.08
சீட்டிழுப்பு இலக்கம் 272
வெற்றி இலக்கம் மீனம்; வெற்றி இலக்கங்கள் 14 17 33 39; மீனம்

### மஹஜன சம்பத

திகதி 2022/12/08
சீட்டிழுப்பு இலக்கம் 4963
ஆங்கில எழுத்து V; வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 3 4 4 3 8

### அத கோடிபதி

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1764
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.12.08
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,767,220/-
வெற்றி இலக்கங்கள் 05 17 46 70; ஆங்கில எழுத்து V

### சம்பத வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 551; திகதி 2022-12-08; வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Q; வெற்றி இலக்கங்கள் 33 54 69; விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,875,396/-
தொ. பே. : 0112 333 546/47 Web: www.dlb.lk

### 28 வசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 23 38 45 75 76
சீட்டிழுப்பு வாரம் 1114; செம்மஞ்சள்; 2022.12.08 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 283,976,897.80
தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,109,715/-
திகதி 2022-12-08; வெற்றி வாரம் 3650; வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 10 22 40 52; சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,255,280/-

### சனிதா

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.08
சீட்டிழுப்பு இல : 4099
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,011,440/-
வெற்றி இலக்கங்கள் 15 34 46 61; ஆங்கில எழுத்து G

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1938; நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.12.08; தினம் வியாழக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,955,800/-
U 11 28 61 71
9367 893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்புக்கள்

கிளிநொச்சி மண்ணில் உயர்தரத்தில் நிர்மானிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட உள்ள பிறேம் பிறதர்ஸ் (prem brothers group) குழுமத்தின் கிளை நிறுவனமான பிறேம் பிறதர்ஸ் றேஸ்ருறண்ட் அண்ட் றிசோட் (prem brothers restaurant and resort) இற்கு கீழ்வரும் விண்ணப்பங்களை கோருகின்றோம்.

- Restaurant manager - 01
- Restaurant accountant - 01
- Resort manager - 01
- Resort room boy - 03
- Resort cleaner - 03
- Restaurant cleaner - 03
- Restaurant waiter - 05
- Restaurant chef food maker - 01
- Restaurant food maker - 02
- Restaurant tea maker - 01
- Restaurant rotty maker - 01
- Kitchen helper - 02

குறித்த வெற்றிடங்களுக்கு ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுவதுடன் குறைந்தது இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். வெளிமாவட்டத்தை சார்ந்தவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.

(13715)

க.தனேஸ்குமார்
இயக்குனர்
(Prem brothers Restaurant and Resort)
இலக்கம் 85, திருநகர், கிளிநொச்சி.
076 042 1322

## வீடு/கட்டடம் தேவை

யாழ் நகரம் அண்டிய பகுதிகளில் சமையல் தொழில் செய்வதற்கு சகல வசதிகளுடனும், விசாலமான வீடு/ கட்டடம் நீண்டகால அடிப்படையில் உடனடியாகத் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு
076 709 3368
(C-5428)

## சீரற்ற காலநிலை பசறை பிரதேச மக்கள் பாதிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக பசறை பிரதேசத்தில் தோட்ட குடியிருப்புகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதற்கமைய பசறை - டெமேரியா "ஏ" பிரிவு தோட்டத்தில் 34 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கோணக்கலை, லுனுகலை பகுதிகளில் பலத்த காற்று காரணமாக பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மாற்று நடவடிக்கைகள் குறித்து செந்தில் தொண்டமான் மாவட்ட அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)

## பலாலி ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞானப் பிரிவு 1975/76 ஆம் ஆண்டில் கல்வி பயின்றவர்களுக்கான அறிவித்தல்

பலாலி ஆசிரியர் கலாசாலை விஞ்ஞான பிரிவு 75/76 இக்கல்வி ஆண்டில் ஒன்றாக கற்ற நாம், பிரிந்து 47 ஆண்டுகளாகிவிட்டன. நாங்கள் சிலர் நேரடியாக வாட்ஸ்அப் மூலம் சந்தித்தும் கதைத்தும் கொள்கின்றோம். பலரின் தொடர்புகள் இல்லை. எனவே ஆசிரிய நண்பர்கள் அனைவரையும் ஏதாவது ஒரு வகையில் ஒன்றிணைத்து ஓர் ஒன்றுகூடலின் ஊடாக கலந்து மகிழ்ந்திட நண்பர்கள் சிலர் விரும்புகின்றனர்.

இவ் அறிவித்தலை உங்களுக்கு தெரிந்த நமது சக நண்பர்களுடன் பகிர்ந்து கீழ் காணும் கையடக்க தொலைபேசிகளுடன் உங்கள் முன்னைய தற்போதைய முழு விவரங்களையும் தருமாறு மிகவும் வினயமாக வேண்டிக் கொள்கிறேன்.

077 362 8729
(வாட்ஸ்அப் இலக்கம்)
078 551 4415

மிகுந்த ஆவலுடன் உங்கள்
முனாஸ்,
எருக்கலம்பிட்டி,
மன்னார்.

(13717)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (திறத்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-5451)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-5452)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புங்குடுதீவு • திருகோணமலை

- பயிற்சிக்கால கைக்கத்தொகை - 20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

# கிளி பீப்பிள்

## அமைப்பின் நூல் வெளியீட்டு விழா

## "தாயாகிய தனித்தவம்"

பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல் சார் மருத்துவக்கட்டுரைகளின் தொகுப்பு நூல்



கிளிநொச்சி
09.12.2022
மதியம் 15.00 தொடக்கம் 17.00 வரை
கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை

உலகப்பந்தில் வாழும் எமது தமிழ்பேசும் அனைத்து உறவுகளும் கண்டிப்பாக வாசித்து பயன்பெறவேண்டிய இலகு அழகுதமிழில் வெளிவந்துள்ள மருத்துவ அறிவியல் நூல் இது.



எழுத்துருவாக்கம்
வைத்திய கலாநிதி கந்தையா குருபரன்
முதுநிலை விரிவுரையாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல் நிபுணர் யாழ்ப்பாண வைத்தியசாலை

(C-5453)

info@kilipeople.org
http://www.kilipeople.org/

இது எமது ஜீவநதி பதிப்பகத்தின் வெளியீடு ஆகும்

ABBY LTD UK

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 132 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
077 814 7389, 077 986 5457

(13716)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோர் ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.